# கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

# தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 –ன் கீழ் கையேடு (03.09.2024 ஆம் நாளன்றுள்ளவாறாக)

## அட்டவணை


| தொ.எண். | தகவல் குறித்த விவரங்கள் | பக்க எண்கள் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 3–4 |
| 2. | அமைப்பு முறை, பணிகள் மற்றும் கடமைகள் குறித்த விவரங்கள் (பிரிவு 4(1)(b)(i)) | 5–7 |
| 3. | அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் அதிகாரங்களும் கடமைகளும் (பிரிவு 4(1)(b)(ii)) | 8–27 |
| 4. | முடிவெடுக்கும் செயல்முறையில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை (பிரிவு 4(1)(b)(iii)) | 28 |
| 5. | பணிகளை நிறைவேற்ற நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் (பிரிவு 4(1)(b)(iv)) | 29 |
| 6. | பணிகளை நிறைவேற்ற பின்பற்றப்படும் விதிகள், ஒழுங்குமுறைகள், அறிவுறுத்தல்கள், நடைமுறை நூல்கள் மற்றும் ஆவணங்கள் (பிரிவு 4(1)(b)(v)) | 30–31 |
| 7. | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஆவணங்களின் வகைகள் குறித்த அறிக்கை (பிரிவு 4(1)(b)(vi)) | 32 |
| 8. | கொள்கையை உருவாக்குதல் அல்லது செயல்படுத்துவது தொடர்பாக பொது மக்களுடன் அல்லது அவர்களால் அளிக்கப்படும் மனு குறித்து கலந்தாலோசிப்பதற்காக நடைமுறையிலுள்ள யாதொரு ஏற்பாடுகள் குறித்த விவரங்கள் (பிரிவு 4(1)(b)(vii)) | 33 |
| 9. | அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் தொலைபேசித் தகவல் தொகுப்பு (பிரிவு 4(1)(b)(ix)) | 34–38 |
| 10. | அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஒவ்வொரு நிலையிலும் பெறும் மாதந்திர அடிப்படை ஊதியங்களின் விவரம் (பிரிவு 4(1)(b)(x)) | 39 |
| 11. | பொது தகவல் அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டாளர்களின் பெயர் மற்றும் பதவி நிலை (பிரிவு 4(1)(b)(xvi)) | 40–41 |

# 2005–ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம்

## அத்தியாயம்–1

## முன்னுரை

**1.1. இக்கையேட்டின் பின்புலம்**

ஒவ்வொரு பொது அதிகார அமைப்பின் செயல்பாட்டில் வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புணர்வையும் ஊக்குவிப்பதற்காகவும், ஒவ்வொரு பொது அதிகார அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் தகவல்களை அணுகுவதற்கு குடிமக்களுக்கு அதிகாரமளிக்கும் பொருட்டும், இந்திய அரசு "தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005", என்னும் சட்டத்தை இயற்றியுள்ளது. இச்சட்டம் 15.06.2005 அன்று நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின் பிரிவு 4(1)(b)–இன் விதித்துறைகளின்படி, தமிழ்நாடு அரசின் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அலுவலர்கள் மற்றும் பொதுமக்களின் தகவல் மற்றும் வழிகாட்டுதலுக்காக இக்கையேடு வெளியிடப்பட்டுள்ளது.

**1.2. இக்கையேட்டின் நோக்கம்**

இத்துறையின் நிருவாக அமைப்பு, அதன் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் செயல்பாடுகள் மற்றும் கடமைகள், இத்துறையில் உள்ள பதிவுகள் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றைப் பற்றி பொது மக்களுக்குத் தெரிவிப்பதே இக்கையேட்டின் நோக்கமாகும்.

**1.3. இக்கையேட்டினைப் பயன்படுத்த விரும்பும் பயனர்கள் யாவர்?**

இக்கையேடு பொது மக்களையும் இச்சேவைகளைப் பயன்படுத்துபவர்களையும் இலக்காகக் கொண்டு, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மற்றும் அதன் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ள அமைப்புகளால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் / திட்டப் பணிகள் மற்றும் நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**1.4. <u>இக்கையேட்டில் இல்லாத / கிடைக்கப்பெறாத தகவல்களைப் பெறுவதற்கான நடைமுறையும் கட்டண முறையும்</u>**

**தகவல்களைப் பெறுவதற்கான நடைமுறை மற்றும் கட்டண விவரங்கள் வருமாறு:–**

அ) தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் 6–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் தகவல்களைப் பெறுவதற்கான கோரிக்கை விண்ணப்பம் எழுத்துப்பூர்வமாக மின்னணு முறை வாயிலாக, நேரடியாக அல்லது தபால் வாயிலாக ரூ.10/–ஐ விண்ணப்பத்துடன், ரொக்கமாக அல்லது வங்கி வரைவோலையாக அல்லது வங்கிக் காசோலையாக அல்லது நீதிமன்ற வில்லையாக இணைக்கப்பட்டு பொதுத் தகவல் அலுவலரிடம் அளிக்கப்பட வேண்டும். பொதுத் தகவல் அலுவலர் பின்வரும் கணக்குத் தலைப்பில் தொகையை வரவு வைக்க வேண்டும்:

"0075–00 பல்வகை பொதுப்பணிகள் – 800. ஏனைய வரவினங்கள் – BK – 2005–ஆம் ஆண்டு தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை (கட்டணம்) விதிகளின் கீழ் கட்டண வசூல்"

(த.தொ.கு 0075 00 800 BK 0006)

விண்ணப்பதாரர், கருவூலம் / சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகம் / பாரத ஸ்டேட் வங்கி / இந்திய ரிசர்வ் வங்கி வாயிலாக மேற்கண்ட கணக்கு தலைப்பின்கீழ் கட்டணம் செலுத்துவதுடன் கட்டணத்தை செலுத்தியதற்கான சான்றாக பொது தகவல் அலுவலரிடம் உரிய ஒப்புகை சீட்டினை அளிக்கலாம்.

ஆ) 2005–ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் 7–ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் தகவல் அளிப்பதற்கு மேலே (அ)–வில் உள்ளவாறு கோரிக்கை வைக்கப்படும் நேர்வில் பின்வருமாறு கட்டணம் செலுத்தப்பட வேண்டும்:–

a) தயாரிக்கப்பட்ட அல்லது நகலெடுக்கப்பட்ட ஒவ்வொரு பக்கத்திற்கும் இரண்டு ரூபாய் வீதம் (A–4 அல்லது A–3 அளவு தாளில்)

b) பெரிய அளவு தாளின் நகலிற்கு உள்ளபடியான கட்டணம் அல்லது அதன் விலை

c) மாதிரிகள் அல்லது வடிவங்களுக்கான உள்ளபடியான கட்டணம் அல்லது விலை மற்றும்;

d) பதிவுருக்களை ஆய்வு செய்வதற்கு, முதல் ஒரு மணி நேரத்திற்கு கட்டணம் இல்லை, அதன் பிறகு ஒவ்வொரு பதினைந்து நிமிடங்களுக்கும் (அல்லது அதன் பகுதிக்கு) ரூபாய் ஐந்து வீதம் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

இ) 2005–ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் 7–ஆம் பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவின் கீழ் தகவல் அளிப்பதற்கு மேலே (அ)–வில் உள்ளபடி கோரிக்கை வைக்கப்படும் நேர்வில் பின்வருமாறு கட்டணம் செலுத்தப்பட வேண்டும்:–

a) வட்டு அல்லது நெகிழ்வட்டு ஆகியவற்றில் வழங்கப்பட்ட தகவல் பெறுவதற்கு, வட்டு அல்லது நெகிழ் வட்டு ஒன்றிற்கு ரூ.50/– (ரூபாய் ஐம்பது) மற்றும்;

b) அச்சிடப்பட்டு தகவல் வழங்கப்படும் நேர்வில் அத்தகைய வெளியீட்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட விலை.

## அத்தியாயம்–2

## அமைப்புமுறை, பணிகள் மற்றும் கடமைகள் குறித்த விவரங்கள்

## (2005–ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் 4(1)(b)(i)–ஆம் பிரிவின் கீழ்)

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசின் கூடுதல் தலைமைச் செயலாளரின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகிறது. அவர் தலைமைத் துறையின் நிருவாகியாகவும் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மாண்புமிகு அமைச்சர்களுக்கு (கூட்டுறவு மற்றும் உணவு மற்றும் உணவுபொருள் வழங்கல்) கொள்கை உருவாக்கம் மற்றும் நிருவாகம் தொடர்பான அனைத்து பொருண்மைகளுக்கும் ஆலோசகராகவும் செயல்படுகிறார்.

1. கூட்டுறவு கடன்.
2. நுகர்வோர் கூட்டுறவு.
3. கூட்டுறவு கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி.
4. கூட்டுறவுகளின் சிறப்பு வகைகள்.
5. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டப்பணி
6. கூட்டுறவுத் தேர்தல்.
7. பொது விநியோகத் திட்டம்.
8. இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் கட்டுப்பாட்டு ஆணைகளை செயல்படுத்துதல்.
9. விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை உள்ளடக்கிய நுகர்வோர் பாதுகாப்பு.

**இத்துறையின் நிருவாக அமைப்பு பின்வருமாறு:–**



இத்தலைமைச்செயலகத் துறை, பொது விநியோக அமைப்பை முறைப்படுத்துவதற்கும் கட்டுப்பாட்டு உத்தரவுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பு வகிக்கின்ற உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இயக்ககம், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கீழ் இயங்கும் கூட்டுறவுச் துறை இரண்டு துறைத் தலைமைகளின் செயல்பாடுகளை வழிநடத்தியும் கட்டுப்படுத்தியும் வருகிறது. பொது விநியோக அமைப்பின் கொள்முதல் முகமையாகவும், மொத்த விற்பனையாளராகவும் செயல்படும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், மாநிலத்தில் சேமிப்புக் கட்டமைப்பு வசதிகளுக்கு வகைசெய்யும் பணியை மேற்கொள்ளும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமும் இத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் துறைத்தலைவர்களில் ஒருவரான கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், கூட்டுறவு தொடர்பாக அவரது கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து பொருண்மைகள் குறித்தும் நடவடிக்கை மேற்கொள்கிறார். உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இயக்குநர், பொது விநியோக அமைப்பு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான பொருண்மைகளுக்குப் பொறுப்பாவார். இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தையும் அதன் கீழ் பிறப்பிக்கப்படுகின்ற கட்டுப்பாட்டு உத்தரவுகளையும் நடைமுறைபடுத்துவதற்காக, கூடுதல் காவல்துறை தலைமை இயக்குநரின் கீழ் குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வுத் துறை செயல்படுகிறது.

<u>தலைமை அலுவலகம் மற்றும் ஏனைய அலுவலகங்களின் முகவரி:–</u>

<u>தலைமைச் செயலக நிலையில்</u>

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
புனித ஜார்ஜ் கோட்டை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

<u>துறைத்தலைமை அலுவலகங்கள்</u>:–

1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்,
   170, பெரியார் ஈ.வெ.ரா. நெடுஞ்சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை– 600 010.
2. இயக்குநர்,
   உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
   சேப்பாக்கம், சென்னை– 600 005.
3. மேலாண்மை இயக்குநர்,
   தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்,
   சென்னை மெட்ரோ ரயில் லிட்., நிருவாக கட்டடம்,
   பூந்தமல்லி நெடுஞ்சாலை, கோயம்பேடு, சென்னை– 600 107.
4. மேலாண்மை இயக்குநர்,
   தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்,
   82, அண்ணா சாலை, கிண்டி, சென்னை– 600 032.
5. தலைவர்,
   மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்,
   தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சாலை,
   வ.உ.சி. நகர், பூங்கா நகர், சென்னை– 600 003.

# அத்தியாயம்–3

## அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் அதிகாரங்களும் கடமைகளும்

## (2005–ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 4(1)(b)(ii)–இன் கீழ்)

**முன்னுரை:**

தமிழ்நாடு அரசின் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, அதன் செயல்பாடுகள் மற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளைப் பொறுத்தவரையில் "தமிழ்நாடு தலைமைச் செயலக அலுவலக நடைமுறை நூலின்" விதித்துறைகளால் நிருவகிக்கப்படுகிறது. மேற்சொன்ன தலைமைச் செயலக அலுவலக நடைமுறை நூல் www.tn.gov.in எனும் வலைதளத்தில் கிடைக்கப்பெறுகிறது.

**அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் அதிகாரங்களும் மற்றும் கடமைகளும்**

இத்துறை, இந்திய ஆட்சிப்பணி அலுவலர் நிலையிலுள்ள செயலாளர் ஒருவரின் தலைமையின் கீழ் செயல்படுகிறது. அவர் இத்துறையின் நிருவாகத் தலைவராகவும், உணவுத்துறை அமைச்சர் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் ஆகிய இருவரின் ஆலோசகராகவும் செயல்படுகிறார். தலைமைச் செயலகத்தில் அவருக்கு 2 இணைச் செயலாளர்கள் மற்றும் 2 துணைச் செயலாளர்கள், 8 சார்புச் செயலாளர்கள், 25 பிரிவு அலுவலர்கள் மற்றும் 50 உதவிப் பிரிவு அலுவலர்கள் உதவுகின்றனர். கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தொடர்பான அரசின் கொள்கைகளை உருவாக்குவதும், சமூகத்தின் இலக்கிடப்பட்ட பிரிவினர்களின் மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்பட வேண்டிய பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதும் இத்துறையின் பொறுப்பாகும். தலைமைச் செயலகத்திலுள்ள இத்துறை அதிகாரிகளின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:–

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அலுவலகத்தின் தலைவராவார். துறையின் அலுவல்களை மேற்கொள்வதில் அலுவல் விதிகளையும், தலைமைச் செயலக அறிவுறுத்தல்களையும் கவனமுடன் பின்பற்றுவதற்கு அவர் பொறுப்பாவார். இணைச் செயலாளர், துணைச் செயலாளர் மற்றும் சார்புச் செயலாளர் உட்பட அவரின் கீழுள்ள பணியாளர்களைப் பொதுவாகக் கண்காணித்து நெறிப்படுத்துவார். மேலும், பணியாளர்கள் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியைச் சிறப்பாகவும் விரைவாகவும் மேற்கொள்வதை உறுதி செய்வதற்கும் பொறுப்பாவார். கொள்கை விவகாரங்கள் மற்றும் ஏனைய அனைத்து முக்கிய பொருண்மைகள் குறித்து ஒட்டுமொத்த துறைக்கும் பொறுப்பு வகிக்கும் செயலாளருடன் கலந்தாலோசித்தப்பின் முடிவு செய்ய வேண்டும்.

**அரசு இணைச் செயலாளர் / துணைச் செயலாளர்**

அரசு இணைச் செயலாளர் / துணைச் செயலாளர் ஒதுக்கீடு செய்யப்பட்ட பொருண்மைகள் தொடர்பான இனங்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டு, குறிப்பிடப்படுகின்றவாறான அத்தகைய இனங்களைச் செயலாளரிடம் அளிப்பார்கள். தேவை ஏற்படின், செயலாளரின் பொது அறிவுறுத்தல்களின் அடிப்படையில், ஆணைகள் வேண்டி நேரடியாக அமைச்சருக்குக் கோப்புகளை அனுப்பலாம். இணைச் செயலாளர் / துணைச் செயலாளர், அவர்களின் பொறுப்பிலுள்ள பிரிவுகளில் பணிகள் மேற்கொள்ளுதல், ஒழுங்குமுறை ஆகிய இரண்டையும் கண்காணிப்பார்.

**அரசு சார்புச் செயலாளர்**

சார்புச் செயலாளர் அவரின் பொறுப்பிலுள்ள பிரிவுகளில் பணிகள் மேற்கொள்ளுதல், ஒழுங்குமுறை ஆகிய இரண்டையும் கண்காணிப்பார்.

**பிரிவு அலுவலர்**

பிரிவு அலுவலர், தலைமைச் செயலகத்தின் ஒரு பிரிவிற்குப் பொறுப்பாவார். அவரின் அறிவுறுத்தல் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரியும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான உதவிப் பிரிவு அலுவலர்கள் அவருக்கு உதவிபுரிவர். அவரின் கீழுள்ள உதவிப் பிரிவு அலுவலருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பொருண்மைகள் தொடர்பான அனைத்துக் கோப்புகளுக்கும் அவர் பொறுப்பாவார். பிரிவில், அனைத்து நிலைகளிலும் பணிகளைச் சிறப்பாகவும் விரைவாகவும் மேற்கொள்வதற்கும், அலுவலக வாலாய நடைமுறைகளுக்கும், அவருடைய உயரலுவலர்களுக்குத் தகவல் தெரிவிப்பதற்கு நேரடி பொறுப்புடையவராவார்.

**உதவிப் பிரிவு அலுவலர்கள்**

குறிப்புகள் மற்றும் வரைவுகளை எழுதுதல், தன் பதிவேடுகளை வைத்து வருதல், பிரிவின் பணியில் உள்ள பிரிவு அலுவலர்களுக்கு உதவியாக செயல்படுதல் ஆகியன உதவிப் பிரிவு அலுவலர்களின் முக்கிய கடமைகளாகும்.

**உதவியாளர்கள்**

ஒப்பிட்டு சரிபார்த்தல், அனுப்புதல், அட்டவணையிடுதல் மற்றும் தீர்வு காணப்பட்ட கோப்புகளை உறையிடுதல் போன்ற வழக்கமான பணிகளையும், வரையறுக்கப்பட்ட காலமுறை பதிவுருக்களை வைத்து வருதல் மற்றும் நினைவுக் குறிப்புகளை எழுதுதல் போன்ற பணிகளையும் மேற்கொள்வார்கள்.

**தட்டச்சர்கள்**

குறிப்புகளையும், வரைவுகளையும் தட்டச்சு செய்வதுடன், அனுப்பப்பட வேண்டிய அனைத்துத் தகவல்களையும் சுத்தநகல் எடுக்கப்பட வேண்டும். அவசியம் ஏற்படும் நேர்வில் அவர்கள் தட்டச்சு செய்த பொருண்மையை பிரிவின் சம்பந்தப்பட்ட உதவிப் பிரிவு அலுவலருடன் அல்லது உதவியாளருடன் இணைந்து சரிபார்க்கப்பட வேண்டும்.

**தனிச்செயலர்கள், நேர்முக உதவியாளர்கள் மற்றும் நேர்முக எழுத்தர்கள்**

தனிச் செயலர்கள், நேர்முக உதவியாளர்கள் மற்றும் நேர்முக எழுத்தர்கள், நேர்விற்கேற்ப செயலாளருக்கு அல்லது ஏனைய அலுவலருக்கு சுருக்கெழுத்து பணிகளை மேற்கொள்வதுடன் அவர்களுக்கு வழங்கப்பட்ட அத்தகைய யாதொரு பணிகளையும் மேற்கொள்வர்.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் **26 பிரிவுகள் (பட்டியல் பிரிவுடன் சேர்த்து)** உள்ளன, அப்பிரிவுகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பொருண்மைகள் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளன அவையாவன:–

| பிரிவின் பெயர்<br>'அ' பிரிவு | நடவடிக்கை எடுக்கப்படும் பொருண்மை விவரங்கள் |
|---|---|
| உ.பி.அ. – 1 | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் தொடர்பான அனைத்து பணியமைப்பு பொருண்மைகள் – தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சொந்த நிதியில் கிடங்குகள் கட்டுதல் – தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிருவாகத்தின் கீழ் இயங்கி வரும் நியாயவிலைக் கடைகளுக்கான கட்டடங்கள் கட்டுதல் – நேரடி கொள்முதல் மையங்கள் மற்றும் நவீன அரிசி ஆலைகள் கட்டுமானம், நிலம் கையகப்படுத்தல் மற்றும் அது தொடர்பான பொருண்மைகள் / நீதிப்பேராணை மனுக்கள் – அரியலூர், கடலூர், கரூர், கன்னியாகுமரி, மதுரை, மயிலாடுதுறை, பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருவண்ணாமலை, திருப்பூர், திருவள்ளூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உள்ள விழிப்புப்பணி தொடர்பான வழக்குகள் – தரக் கட்டுப்பாடு தொடர்பான அனைத்து பொருண்மைகள் – பொதுவான நடப்பு கோப்புகள். |
| உ.பி.அ. – 2 | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக பணியமைப்பு தவிர ஏனைய அனைத்து பொருண்மைகள் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சொந்த நிதியின் கீழ் கிடங்குகள் கட்டுதல் – சென்னை, செங்கல்பட்டு, கோயம்புத்தூர், திண்டுக்கல், தருமபுரி, ஈரோடு, கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, நீலகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், இராணிப்பேட்டை, சிவகங்கை, தென்காசி, திருவாரூர், திருப்பத்தூர், தேனி மற்றும் வேலூர் மாவட்டங்களில் உள்ள விழிப்புப்பணி தொடர்பான வழக்குகள் – தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் இயங்கும் நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் விற்பனையாளர்கள் மீதான புகார்கள் – மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனம் தொடர்பான பொருண்மைகள் – 1951–ஆம் ஆண்டு தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு சட்டம் மற்றும் 1953–ஆம் ஆண்டு தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு விதிகள் – 1962–ஆம் ஆண்டு சேமிப்பு கிடங்கு நிறுவன சட்டம் – அமுதம் கடைகள் குறித்த நேர்வில் நியாயவிலைக் கடைகளை கட்டுதல் / புதுப்பித்தல். |
| பி பிரிவு | |
| உ.பி.அ. – 1 | நெல் கொள்முதல் தொடர்பான அனைத்து பொருண்மைகள் இந்திய அரசிடமிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு கடன் |

| | |
|---|---|
| | வசதிகள் – தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மாதாந்திர இருப்பு கணக்கு விவர அறிக்கையை மும்பையில் உள்ள இந்திய ரிசர்வ் வங்கிக்கு அனுப்புதல் – இந்திய ரிசர்வ் வங்கியிலிருந்து குறுகிய கால கடன் வசதிகளைக் பெறுதல் – அரவை / குற்றுகை முகவர்கள் மற்றும் அரவை கட்டணங்களை நிர்ணயித்தல் – நிலுவையில் உள்ள அரவை தொகையை தள்ளுபடி செய்தல் – சணல் (சாக்கு) பை தொடர்பான அனைத்து பொருண்மைகள் – இந்திய உணவுக் கழகம் – நெல்லுக்கான குறைந்தளவு ஆதார விலை மற்றும் அது தொடர்பான ஏனைய பொருண்மைகள் – அரிசி தொடர்பான அனைத்து பொருண்மைகள் – அரிசிக்கான திறந்த சந்தை விற்பனை திட்டம் (உள்நாடு) – இந்திய பயிர் பதன தொழில்நுட்ப கழகம் – குறிப்பிடப்பட்ட உணவு பொருட்கள் (தேவைகளுக்கான உரிமம், இருப்பு வரையறை மற்றும் போக்குவரத்து கட்டுப்பாடுகள்) நீக்கம் தொடர்பான ஆணை 2022 – பொதுவாக உணவு தானியங்கள், நெல் மற்றும் அரிசி ஆகியவற்றை எடுத்து செல்லுதல் – 1977–ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசிய பொருட்கள் (இருப்பு மற்றும் விலைகளை காட்சிப்படுத்துதல் மற்றும் கணக்குகளை வைத்து வருதல் ) ஆணை – கூட்டங்கள். |
| உ.பி.அ.–2 | 1955–ஆம் ஆண்டு அத்தியாவசிய வர்த்தக பொருட்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட கட்டுப்பாட்டு ஆணைகள் – தமிழ்நாடு நுகர்வோர் வாணிபக் கழகத்திற்கு உணவு மானியம் ஒப்பளிப்பு – அரிசிக்கான கொள்முதல் விலை நிர்ணயம் செய்தல் – இந்திய அரசிடமிருந்து நிர்ணயம் செய்யப்பட்ட அரிசிக்கான விலையின் மாறுபாடு விலை வீதத்தை கோருதல் – அந்த்யோதயா அன்ன யோஜனா (AAY) (ஏழைகளுக்கான உணவுத் திட்டம்) – அரிசி / செறிவூட்டப்பட்ட அரிசி மற்றும் அனைத்து பொருண்மைகள் – 2013–ஆம் ஆண்டு தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் – தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் (NADP) தொடர்பான கூட்டம் – நல நிறுவனங்கள் மற்றும் விடுதிகளுக்கு உணவு தானியங்களை ஒதுக்கீடு செய்தல் – அம்மா உணவகங்களுக்கு அரிசி வழங்குதல் – சிறுதானியங்கள் விநியோகம் – இருபது அம்ச திட்டம் (Twenty Point Programme (TPP)) – அரிசி மற்றும் அதைச்சார்ந்த பொருட்களுக்கான கட்டுப்பாட்டு ஆணைகள் – 1959–ஆம் ஆண்டு அரிசி ஆலை தொழில் (முறைபடுத்தல் மற்றும் உரிமம்) விதிகள் – நேரடி கொள்முதல் மையங்கள் தொடர்பான அனைத்து பொருண்மைகள் – இந்திய அரசிடம் நிலுவையில் உள்ள அரவை மானியம் கோருதல் குறித்த பட்டியல் அனுப்புதல் மற்றும் அரவை கூலி, சிப்பமாக்கும் பொருட்கள் மற்றும் சணல் பைகளுக்கு கட்டணங்கள் நிர்ணயித்தல் – பொதுவான தபால்கள். |

| | |
|---|---|
| | |
| 'சி' பிரிவு | |
| உ.பி.அ.–1 | விலையில்லா சமையல் எரிவாயு / எரிவாயு அடுப்பு விநியோகம் தொடர்பான அனைத்து பொருண்மைகள் – சமையல் எரிவாயு தொடர்பான பொருண்மைகள் மற்றும் அதைச்சார்ந்த சட்டமன்றப் பேரவை வினாக்கள் / நீதிப்பேராணை மனுக்கள் – மண்ணெண்ணெய் மற்றும் தாவர எரி எண்ணெய் தொடர்பான அனைத்து பொருண்மைகள் – 1973–ஆம் ஆண்டு தமிழ்நாடு மண்ணெண்ணெய் (வணிகத்தை முறைப்படுத்தல்) ஆணை அடிப்படையிலான பிரச்சினைகள் – சமையல் எண்ணெய் மற்றும் சமையல் எண்ணெய் வித்துக்கள் தொடர்பான பொருண்மைகள் – உணவு பதப்படுத்துதல் – உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலை – சிமெண்ட் மற்றும் அதைச்சார்ந்த பொருட்கள் தொடர்பான கட்டுப்பாட்டு ஆணைகள் – மண்ணெண்ணெய், தாவர எண்ணெய் மற்றும் இதர பொருட்கள் தொடர்பான 1977–ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசிய பொருட்கள் (இருப்பு மற்றும் விலைகளை காட்சிப்படுத்துதல் மற்றும் கணக்குகளை வைத்து வருதல்) ஆணை – அரியலூர், கடலூர், கரூர், கன்னியாகுமரி, மதுரை, மயிலாடுதுறை, பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருவண்ணாமலை, திருப்பூர், திருவள்ளூர், விழுப்புரம், மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உள்ள நேரடி கொள்முதல் மையங்கள் தொடர்பான அனைத்து சட்டமன்றப் பேரவை வினாக்கள். |
| உ.பி.அ.–2 | சீராய்வு மனுக்கள் – மண்ணெண்ணெய் விநியோகக்கடை திறத்தல் – இந்திய அரசு ஒதுக்கீடு செய்த மண்ணெண்ணெயை விநியோகம் செய்தல் – உணவுப் பொருட்கள் பிரிவை ஒருங்கிணைத்தல் – உணவுத் துறை தொடர்பான காணொலிக் காட்சி (ஒன்றுக்கு மேற்பட்ட கட்டடத்தை அல்லது கட்டுமானத்தை திறந்து வைத்தல்) – பிரதமரின் உஜ்வாலா யோஜனா திட்டம் உணவுப் பொருட்கள் வீணாவதை தடுத்தல் – மண்ணெண்ணெய் மற்றும் அதனைச்சார்ந்த பொருட்கள் தொடர்பான கட்டுப்பாட்டு ஆணைகள் – உணவுத்துறை தொடர்பாக அரசின் உத்திரவாதத்தை அனுமதித்தல் – மண்ணெண்ணெய், தாவர எரி எண்ணெய் மற்றும் அதனைச்சார்ந்த பொருட்கள் தொடர்பாக 1952–ஆம் ஆண்டு தொழில்துறை நிறுவனங்களின் பதிவு மற்றும் உரிமம் வழங்குதல் ஆணை – உணவுப் பொருட்கள் பிரிவின் பல்வகை பொருண்மைகள் – |

| | |
|---|---|
| | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்(TNCSC), தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் (TNWC), மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் (SCDRC) ஆகியவற்றிற்கு தகவல்களை வழங்குதல் – செங்கல்பட்டு, கோயம்புத்தூர், திண்டுக்கல், தருமபுரி, ஈரோடு, கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, நீலகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், இராணிப்பேட்டை, சிவகங்கை, தென்காசி, திருவாரூர், திருப்பத்தூர், தேனி மற்றும் வேலூர் மாவட்டங்களிலுள்ள நேரடி கொள்முதல் மையங்கள் தொடர்பான சட்டமன்றப் பேரவை வினாக்கள் – பொதுவான தபால்கள். |
| 'டி' பிரிவு | |
| உ.பி.அ.–1 | உணவு (வரவு செலவு) மானியக் கோரிக்கை – அறிவிப்புகள் – நாடாளுமன்ற நிலை குழுக் கூட்டம் – முதலலைச்சரின் ஆய்வுக் கூட்டம் – முதலமைச்சர் தலைமையில் நடைபெறும் துறை சார்ந்த ஆய்வுக் கூட்டம் – மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை உயர் அதிகாரிகள் மாநாடு – நிதி ஆயோக் தொடர்பான அனைத்து பொருண்மைகள் – மாநில வளர்ச்சி குழு – கூட்டுறவு மற்றும் உணவுத் துறைகளின் மதிப்பீட்டுக் குழு தொடர்பான அனைத்து பொருண்மைகள் – சர்க்கரை, வெல்லம், நாட்டுச் சர்க்கரை, மைதா, கோதுமை மற்றும் கோதுமை தயாரிப்புகள் மற்றும் ஏனைய பொருட்கள் 1977–ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசிய பொருட்கள் (இருப்பு மற்றும் விலைகளை காட்சிப் படுத்துதல் மற்றும் கணக்குகளை வைத்து வருதல்) ஆணை– மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள். |
| உ.பி.அ.–2 | சர்க்கரை, வெல்லம், நாட்டுச் சர்க்கரை (கரும்புச் சர்க்கரை) மைதா, கோதுமை மற்றும் கோதுமை தயாரிப்புகள் தொடர்பான அனைத்து பொருண்மைகள் – மாவு ஆலைகள் – பொங்கல் பரிசுத் தொகுப்பு – குடும்ப அட்டைதாரர்களுக்கு ரொக்கப்பணம் வழங்குதல் – தேசிய ஒருங்கிணைப்புக் கூட்டம் –மானியக் கோரிக்கை மற்றும் உணவுத் துறை தொடர்பான அனைத்து அறிவிப்புகள் – பருவமழைக்கு முந்தைய தயார்நிலைக் கூட்டம் மற்றும் தேசியப் பேரிடர்கள் – தென் மண்டல குழுக் கூட்டம் – கோதுமை மாவினை அம்மா உணவகத்திற்கு கொண்டு சேர்த்தல் – சர்க்கரை, வெல்லம், நாட்டுச்சர்க்கரை, மைதா, கோதுமை மற்றும் கோதுமை தயாரிப்புகள் மற்றும் அவை தொடர்புடைய பொருட்கள் சம்பந்தப்பட்ட |

| | |
|---|---|
| | கட்டுப்பாட்டு ஆணைகள் – 1952–ஆம் ஆண்டு கோதுமை அரவை ஆலை, மாவு ஆலைகள் மற்றும் சோளம் அரவை ஆலைகள் மற்றும் அவைசார்ந்த பொருட்கள் தொடர்பான தொழில் நிறுவனங்களை பதிவு செய்தல் மற்றும் உரிமம் வழுங்கல் ஆணை – துறைத் தலைவர்களுக்கு சட்டமன்றப் பேரவைக்கான கூட்ட அனுமதி அடையாள அட்டையை வழங்குதல் – பொது விநியோகத் திட்டம் நீங்கலாக 2002–ஆம் ஆண்டு உணவுப் பண்டங்கள் குறித்த (உரிமம் தேவைகள் இருப்பு வரம்புகள் மற்றும் எடுத்துச் செல்வதன் மீதான கட்டுப்பாடுகள்) நீக்கம் – மாண்புமிகு உணவு அமைச்சர் தலைமையில் நடைபெறும் கூட்டங்கள் – பொதுவான நடப்பு தபால்கள். |
| 'இ' பிரிவு | |
| உ.பி.அ.–1 | பின்வரும் மாவட்டங்களில் உள்ள அனைத்து ஆட்கொணர்வு மனுக்கள் மற்றும் சிறப்பு அனுமதி மனுக்கள்:– சென்னை, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, கிருஷ்ணகிரி, கடலூர், விழுப்புரம், வேலூர், தருமபுரி, நாமக்கல், காஞ்சிபுரம், நீலகிரி, திருவண்ணாமலை, திருவள்ளூர், கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, செங்கல்பட்டு, மற்றும் திருப்பூர் – 1980–ஆம் ஆண்டு கள்ளசந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பொருட்கள் பராமரிப்புச் சேவை சட்டம் மற்றும் அதுசார்ந்த பொருண்மைகள் – மாநில ஆலோசனைக் குழு மற்றும் அதுசார்ந்த பொருண்மைகள் மற்றும் மாநில ஆலோசனைக் குழு அமைத்தல் – பொதுவாக இந்திய அரசின் இன்றியமையாப் பொருட்கள் சட்டம் தொடர்பாக பெறப்படும் அனைத்து அறிவிக்கைகள் மற்றும் திருத்தங்கள். |
| உ.பி.அ.–2 | பின்வரும் மாவட்டங்களில் உள்ள அனைத்து ஆட்கொணர்வு மனுக்கள் மற்றும் சிறப்பு அனுமதி மனு :– மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, திண்டுக்கல், இராமநாதபுரம், விருதுநகர், தேனி, சிவகங்கை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, திருச்சி, கரூர், பெரம்பலூர், தூத்துக்குடி, அரியலூர், தென்காசி மற்றும் மயிலாடுதுறை – 1980–ஆம் ஆண்டு கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பொருட்கள் பராமரிப்பு சேவை சட்டம் மற்றும் அதுதொடர்பான பொருண்மைகள் – மாநில ஆலோசனைக் குழு மற்றும் அதுதொடர்பான பொருண்மைகள்– பொது விநியோகத் திட்டப் பொருட்களஙன கசிவு மற்றும் பொருட்களை மாற்றம் செய்தல் தொடர்பாக 2015–ஆம் ஆண்டு பொது விநியோக அமைப்பின் கட்டுப்பாட்டு ஆணையின் XI மற்றும் XIII–ஆம் வகையின் கீழ் மாதாந்திர காலக்கெடு மற்றும் காலாண்டு அறிக்கையை இந்திய அரசிற்கு அனுப்புதல் – பொதுவான தபால்கள். |

| | |
|---|---|
| | |
| 'எப்' பிரிவு | |
| உ.பி.அ.–1 | இலக்கிடப்பட்ட பொது விநியோகத் திட்டம் – தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் அனைத்து நியாயவிலைக் கடைகளையும் தொடங்குதல் மற்றும் இரண்டாக பிரித்தல் தொடர்பான பொருண்மைகள் – பொது விநியோகத் திட்டம் தொடர்பான அனைத்து பொருண்மைகள் – பட்டியலிடப்பட்ட பொருட்கள் தொடர்பான அனைத்து பொருண்மைகள் – அத்தியாவசிய பொருட்களை நிவாரண நடவடிக்கையாக வழங்குதல் – அனைத்து வகையான பருப்பு மற்றும் அனைத்து ஏனைய பொருட்களுடன் கொள்முதல் மற்றும் அதைச் சார்ந்த பொது விநியோகத் திட்டம் தொடர்பான அனைத்து பொருண்மைகள் – அம்மா உணவகத்திற்கு துவரம் பருப்பு விநியோகம் செய்தல் –குடும்ப அட்டைக்கு உணவு தானியங்கள் விநியோகம் செய்வது தொடர்பான பொதுவான பொருண்மைகள் – சிறப்பு பொது விநியோகத் திட்டம் மற்றும் அதைச் சார்ந்த பொருண்மைகள் – பருப்பு மற்றும் ஏனைய பொருட்கள் தொடர்பாக 1977–ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பொருட்கள் (இருப்புகள் மற்றும் விலை காட்சிப்படுத்துதல் மற்றும் கணக்குகளை வைத்து வருதல்) ஆணை – பருப்பு மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள் தொடர்பான கட்டுப்பாட்டு ஆணைகள் – 1951–ஆம் ஆண்டு தொழில்கள் (மேம்படுத்துதலும் முறைப்படுத்துதலும்) சட்டம் – 1952–ஆம் ஆண்டு பருப்பு மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள் தொடர்பான தொழில் நிறுவனத்தை பதிவு செய்தல் மற்றும் உரிமம் பெறுதல் ஆணை. |
| உ.பி.அ.–2 | திரள்திறன் குடும்ப அட்டைகள் (குடும்ப அட்டைகள்) வழங்குதல் – பொது விநியோகத் திட்டத்தை முழுவதும் கணினிமயமாக்கல் – பொது விநியோகத் திட்டத்தின் ஒருங்கிணைந்த மேலாண்மை (IMPDS) – "ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை" திட்டம் (ONORC) – குடும்ப அட்டை தரவுத்தொகுப்பில் ஆதார் இணைத்தல் – தமிழ்நாடு பட்டியலிடப்பட்ட பொருட்கள் (வரையறுக்கப்பட்டவை மற்றும் தரத்திற்கு உட்பட்டவை) ஆணை – பொது விநியோகத் திட்டம் (PDS) தொடர்பான 2002–ஆம் ஆண்டு குறிப்பிட்ட உணவுப் பொருட்களுக்கான (உரிமத்தேவைகள், பங்கு அளவுகள் மற்றும் இயக்கக் கட்டுப்பாடுகள்) நீக்கும் ஆணை – பொதுவான தபால்கள். |

| | |
|---|---|
| | |
| 'ஜி' பிரிவு | |
| உ.பி.அ.–1 | சட்டமன்றப் பேரவை வினாக்கள் மற்றும் உறுதிமொழிகளை ஒருங்கிணைத்தல் மற்றும் சட்டமன்றப் பேரவை வினாக்களுக்கான நடவடிக்கைகளில் பணி முன்னேற்றத்தை ஆய்வு செய்தல் – விலை கண்காணிப்பு குழு மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து பொருண்மைகள் – வேளாண் விலை ஆணையம் – பொதுவான நடப்பு தபால்கள். |
| உ.பி.அ.–2 | நீதிப்பேராணை மனுக்கள், கட்டண பட்டிகள், மற்றும் அதுதொடர்பான தபால்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்தல் – நீதிமன்ற வழக்கு கண்காணிப்பு ஏற்பாட்டுமுறை (CCMS). |
| 'எச்' பிரிவு | |
| உ.பி.அ.–1 | தேசிய / மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் தொடர்பான அனைத்து பொருண்மைகள் – 1986–ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1988–ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்பு விதிகள் தொடர்பான அனைத்து பொருண்மைகள் – சந்தை நடவடிக்கை திட்டம் – வெங்காயம் மற்றும் ஏனைய பொருட்களுக்கான கட்டுப்பாட்டு ஆணைகள் – வெங்காயம் மற்றும் ஏனைய பொருட்கள் தொடர்பான 1977–ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசிய பொருட்கள் (இருப்புகள் மற்றும் விலை விவரங்களை காட்சிப்படுத்தல் மற்றும் கணக்குகளை வைத்து வருதல்) ஆணை. |
| உ.பி.அ.–2 | அனைத்து செயலாளர்கள் கூட்டம் – பிணைய வைப்புத் தொகையை திரும்பப்பெறுதல் – தன்னார்வ சுகாதார அமைப்புகளுக்கு தேசிய விருதுகள் – உலக நுகர்வோர் உரிமைகள் நாள் – மத்திய / மாநில நுகர்வோர் பாதுகாப்பு – பொதுவான கூட்டங்கள் – நிதிநிலை அறிக்கை மற்றும் கணக்குத் தணிக்கைகள் மறுப்புகள் – நுகர்வோர் கல்விக்கான நிதியுதவி – பொதுவான தபால்கள். |
| 'ஜே' பிரிவு | |
| உ.பி.அ.–1 | 1955–ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் 6 'C'–ஆம் பிரிவின் கீழ் அனைத்து மாவட்டங்களில் இருந்து தாக்கல் செய்யப்படும் மேல்முறையீட்டு மனுக்கள் – மேல்முறையீடு மனுக்கள் மீதான நீதிப்பேராணை மனுக்கள் மற்றும் தொடர்புடைய பிரச்சினைகள் – குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு துறை தொடர்பான அனைத்து பணியாளர் தொகுதி தொடர்பான பொருண்மைகள் – பொது நிறுவனங்கள் குழு தொடர்பான அனைத்து பொருண்மைகள். |
| உ.பி.அ.–2 | உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை |

| | |
|---|---|
| | தொடர்பான அனைத்து பணியாளர் பொருண்மைகள் – நீதிப்பேராணை மனுக்கள் மற்றும் அதனைச் சார்ந்த விவகாரங்கள் – இணையவழி குற்றங்கள் தொடர்பான அனைத்து விவகாரங்கள் (கூட்டுறவு மற்றும் உணவு ஆகிய இரு துறைகள்) – பொதுவான தபால்கள். |
| 'சிஏ' பிரிவு | |
| உ.பி.அ. – 1 | நுகர்வோர் கூட்டுறவுகள் – நுகர்வோர் மொத்த விற்பனை பண்டகசாலைகள் தொடர்பான அனைத்து பொருண்மைகள் – அரியலூர், கடலூர், கரூர், கன்னியாகுமரி, மதுரை, மயிலாடுதுறை, பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருவண்ணாமலை, திருப்பூர், திருவள்ளூர், விழுப்புரம் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் புதிய நியாயவிலைக் கடைகளை திறத்தல் மற்றும் இரண்டாக பிரித்தல் தொடர்பாக – அம்மா மருந்தகம் திறத்தல் – ஊதிய திருத்தம், ஓய்வூதியம் முடிவுறும் பயன்கள் முதலியவை தொடர்பான மொத்த விற்பனை பண்டகசாலைகளில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் ஓய்வுபெற்ற பணியாளர்களின் சீராய்வு மனு – தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் – அலுவலக ஆணையில் உதவி பிரிவு அலுவலர்–1–க்கு குறிப்பிடப்பட்டுள்ளவாறாக, மாவட்டங்களில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நியாயவிலைக் கடைகளை புதிதாக கட்டுதல் / புதுப்பித்தல். |
| உ.பி.அ. – 2 | சென்னை, செங்கல்பட்டு, கோயம்புத்தூர், திண்டுக்கல், தருமபுரி, ஈரோடு, கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, நீலகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், இராணிப்பேட்டை, சிவகங்கை, தென்காசி, திருவாரூர், திருப்பத்தூர், தேனி மற்றும் வேலூர் மாவட்டங்களில் புதிய நியாயவிலைக் கடைகளை திறத்தல் மற்றும் இரண்டாகப் பிரித்தல் தொடர்பாக – மாவட்டங்களில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நியாயவிலைக் கடைகளை புதிதாக கட்டுதல் / புதுப்பித்தல் – மொத்த விற்பனை பண்டகசாலைகளில் பணிபுரியும் ஊழியர்களின் சீராய்வு மனு, குறைதீர்க்கும் புகார் குறித்த மனுக்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் ஊதிய திருத்தம், ஓய்வூதியம், முடிவுறும் பயன்கள் குறித்த ஓய்வு பெற்ற பணியாளர்களின் மனுக்கள் – பொதுவான தபால்கள். |
| 'சிபி' பிரிவு | |
| உ.பி.அ.–1 | பல்வகை பொருண்மைகள் மீதான பிற துறைகள் அல்லது முகமைகளால் நடத்தப்படும் கூட்டம் மற்றும் கருத்தரங்கம் – கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் துறை ரீதியிலான கூட்டங்கள் மற்றும் மாதாந்திர (ஒத்துழைப்பு கூட்டம்) கூட்டங்கள் கூட்டுதல் – கூட்டுறவுப் பிரிவு தொடர்பான ஏனைய |

| | |
|---|---|
| | பொருண்மைகள் – பல்வேறு விருதுகள் வழங்குதல் தொடர்பான அனைத்து பொருண்மைகள் – மதிப்பீடு மற்றும் செயல்முறை சார்ந்த ஆராய்ச்சி – இத்துறை மற்றும் தலைமைத் துறைகள் / துறைத் தலைமைகள் தொடர்பான தமிழ்நாடு மின்ஆளுகை (TNeGA) தொடர்பான தகவல் பொருண்மைகள் தொழில்நுட்பத் துறை தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள்– சுதந்திர நாள் உரை – 1951–ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (மேம்படுத்துதலும் முறைப்படுத்துதலும்) சட்டம் மற்றும் வெங்காயம் மற்றும் அது சார்ந்த பொருட்களுடன் தொடர்புள்ள வரையில் 1952–ஆம் ஆண்டு, தொழிற்சாலை பொறுப்பு ஆணை பதிவு செய்தல் மற்றும் உரிமம் பெறுதல். |
| உ.பி.அ.–2 | சிறப்பு வகை கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான அனைத்து பொருண்மைகள் – தமிழ்நாடு கூட்டுறவு அச்சகங்கள் தொடர்பான அனைத்து பொருண்மைகள் – தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் மற்றும் விதிகள் குறித்த விளக்கத்துடன் தொடர்புடைய கோப்புகள் நீங்கலாக பிற துறைகளின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் கோப்புகள் – பெரும் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் (LAMPS) – கொரோனா வைரஸ் (கோவிட் பெருந்தொற்று) (COVID–19) தொடர்பான அறிவுரைகள் துறைகளிலிருந்து இணக்க அறிக்கையை பெறுதல் மற்றும் உரிய துறைக்கு இணக்க அறிக்கைகளை அளித்தல் – பொதுவான நடப்பு தபால்கள். |
| 'சிசி' பிரிவு | |
| உ.பி.அ.–1 | தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி தொடர்பான அனைத்து பொருண்மைகள் – தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியின் நிருவாகம் மற்றும் அதன் பணியாளர்கள் / உறுப்பினர்கள் அளிக்கும் புகார்கள் / கருணை மனுக்கள் / நீதிப்பேராணை மனுக்கள் / மேல்முறையீடு / சீராய்வு மனுக்கள் – தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியின் நிருவாகத்திற்கும் மற்றும் அதன் பணியாளர்களுக்கும் / உறுப்பினர்களுக்கும் எதிராக அளிக்கப்படும் அனைத்து புகார்கள் / மனுக்கள் – வேளாண் கடன் – பொதுவாக இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் நபார்டு உடன் பெற்ற குறுகிய கால மற்றும் மத்தியக் காலக் கடன்கள் – மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தொடர்பான பொதுவான பிரச்சினைகள் – மாநில அளவிலான கண்காணிப்புக் குழு – மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் செயல்பாட்டினை ஆய்வு செய்தல் – அனைத்து கூட்டுறவுகள் தொடர்பான மீதூதியம் மற்றும் கருணைத்தொகை (பரிவுத் தொகை)– தமிழ்நாடு நில வள வங்கி சட்டம். |

| | |
|---|---|
| உ.பி.அ.–2 | அனைத்து மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் பணியாளர்களாலும் உறுப்பினர்களாலும் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுக்கள் / மேல்முறையீடு / சீராய்வு மனுக்கள் – அனைத்து மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் பணியாளர்கள் / உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகம் மீதான அனைத்து புகார்கள் / மனுக்கள் – தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் – மாநில அளவிலான வங்கியாளர்கள் குழு தொடர்பான அனைத்து விவகாரங்கள் – அம்மா வங்கி அட்டை – உயர் நிலைக் குழுக் கூட்டம் – பொதுவான தபால்கள். |
| 'சிடி' பிரிவு | |
| உ.பி.அ–1 | கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர்கள் தொடர்பான அனைத்து பணி பொருண்மைகள் பணியிடமாற்றம் மற்றும் பணிநியமனங்கள்– கூட்டுறவு சார் பதிவாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர்களாக பதவி உயர்வு அளித்தல் – கூட்டுறவு சார் பதிவாளர்களிலிருந்து கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளராகப் பதவி உயர்வு பெறுவதற்கான தேர்ந்தோர் பட்டியல் வெளியிடுதல் – கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் நிலைவரை பணி இடைநீக்கம் செய்யப்பட்ட வழக்குகளின் ஆய்வு – பொதுவான தபால்கள். |
| உ.பி.அ.–2 | தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின், விதி 9(A) கீழுள்ள வழக்குகள் உட்பட கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர்களுடன் தொடர்புடைய ஒழுங்கு நடவடிக்கை விவகாரங்கள் – கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு மனுக்கள் – கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர்கள் கடவுச்சீட்டு பெறுவதற்கு ஏதுவாக தடையின்மைச் சான்றிதழ் அனுமதித்தல். |
| 'சிஇ' பிரிவு | |
| உ.பி.அ.–1 | கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் / கூடுதல் பதிவாளர் மற்றும் தமிழ்நாடு நகரக் கூட்டுறவுச் சங்க (TUCS) இயக்குநர் பணியிடங்கள் தொடர்பான அனைத்து பொருண்மைகள் – தற்போதுள்ள அலுவலகத்தை மறுசீரமைத்தல் உட்பட மற்றும் புதிய அலுவலகம் அமைத்தல் பணியிடங்களுக்கு ஒப்பளிப்பு – கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர்கள் மற்றும் கூடுதல் பதிவாளர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு மனுக்கள் – பொதுவான தபால்கள். |

| | |
|---|---|
| உ.பி.அ.–2 | தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கை மற்றும் மேல்முறையீடு) விதிகளின், விதி 9(A)–இல் குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகள் உட்பட – கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர்கள் மற்றும் கூடுதல் பதிவாளர்களுடன் தொடர்புடைய ஒழுங்கு நடவடிக்கை விவகாரங்கள் – இணைப்பதிவாளர்கள் மற்றும் கூடுதல் பதிவாளர்களின் பணி ஓய்வு கருத்துருக்கள் – கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர்கள் / கூடுதல் பதிவாளர்கள் கடவுச்சீட்டு பெறுவதற்கு ஏதுவாக தடையின்மைச் சான்றிதழ் அனுமதித்தல். |
| 'சிஜி' பிரிவு | |
| உ.பி.அ.–1 | கூட்டுறவுத் துறை தொடர்பான வரவு செலவுத் திட்டம் – மாநில வளர்ச்சி குழு விவகாரங்கள் மற்றும் கூட்டுறவுக்கான நிதி ஆயோக் தொடர்பாக அனைத்து பொருண்மைகள் – திட்டப்பணிகள் மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் ஆகியோர்களால் சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் – அரசு சாதனைகள் குறித்த அறிக்கை – மாநில நிதிக் குழு – பயிர்க் காப்பீடு திட்டங்கள் – மாநிலங்களின் கூட்டுறவு அமைச்சர்களின் மாநாடு – மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி / கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்களுடன் துறை அலுவலர்களின் கூட்டம் / ஆய்வு – மாண்புமிகு கூட்டுறவு அமைச்சரின் தலைமையில் நடைபெறும் ஆய்வு கூட்டங்கள் – மாநிலத்தின் கூட்டுறவுத் துறையில் உள்ள திட்டங்கள் கூட்டுறவுகளால் நடத்தப்படும் நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் விற்பனையாளர்கள் மீதான புகார்கள் மற்றும் சுயஉதவி குழு தொடர்பான அனைத்து பொருண்மைகள். |
